
Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்




தொகுப்பு 10 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2020

**R 5420**

## "நினைவுகூருதலின் இராப்போஜனம்"

## "THE MEMORIAL SUPPER'

எப்புறமும் உள்ள கர்த்தருடைய பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜனங்கள் அனைவரும், நம் பாவங்களுக்காக தம்மை பலிசெலுத்தின நம் மீட்பரின் மரணத்தை நினைவுகூறும் சிலாக்கியத்தை ஆதாயப்படுத்துவர் என்று நாம் நம்புகிறோம். அதாவது, மனித நிலைமையில் மீட்பரின் பாடுகளிலும் மரணத்திலும் அவரோடுகூட நாம் பங்குபெறுதலைக் குறித்து அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். நம் கர்த்தரும் அப்போஸ்தலர்களும், அடையாளமான அவரது மரணத்தை, நிகழ்வு நடப்பதற்கு முன்கூட்டியே சந்தித்தனர், ஆகவே அவரது பலியின் வருடாந்திர ஆசரிப்பில் நாம் கலந்துகொள்வது பொருத்தமானதே.

யூதருடைய பஸ்கா பண்டிகைக்கு பதிலாக, இந்த நினைவுகூருதலை ஏற்படுத்தியிருந்த கர்த்தருடைய நோக்கத்துக்கு இசைவாக வருடந்தோறும் அனுசரிப்பது, இந்த தருணத்தை மிகவும் ஈர்க்கக்கூடியதாக உள்ளது. இந்த வருடாந்திர நினைவுகூறுதலின் அம்சத்தை புறக்கணித்துவிட்டு, மாதந்தோறும், வாரந்தோறும், 3 மாதத்திற்கொருமுறை என்றும் அனுசரிக்கிற எந்த கொண்டாட்டமும் இசைவற்றது. வேறுபட்டு இதை ஆசரிப்பவர்களை நாம் குறைகூறாதிருப்போமாக. ஆனால் சமயம் வாய்க்கும்போது. அவர்களுக்கு இந்த மாபெரும் நினைவுகூறுதலின் நிகழ்ச்சியை நாம் கடைப்பிடிப்பதன் காரணங்களை தெரிவிப்போமாக.

இதை நாம் வருடத்திற்கொருமுறை செய்யும்போதெல்லாம், அவர் வரும்வரைக்கும் கர்த்தருடைய மரணத்தை நாம் அறிவிக்கிறோம். நம் கர்த்தர் அறுவடைக்காலத்தின்போது, நம்மோடு பலவருடங்களாக பிரசன்னமாகியிருக்கிறார் என்று நாம் நம்பியிருக்கும்போது, அவரது மரணத்தை நினைவுகூறும் ஆசீர்வதிக்கப்பட்ட ஞாபகார்த்தத்தை தொடர்ந்து அனுசரிப்பதில் தடை ஏற்படுத்துவதில்லை. கர்த்தருடைய இரண்டாம் வருகை வரைக்கும் என்பது, இந்த யுகத்தின் முழு அறுவடைப் பணியும் முடிவடைந்து, கிறிஸ்துவின் முழு சரீரமாகிய சபையும் மகிமையை அடையும்வரை, அவரது மரணத்தை தொடர்ந்து அனுசரிக்கவேண்டும் என்ற அர்த்தத்தின்படியே அவர் கூறினார் என்பது நம் கருத்தாயுள்ளது. அதன்பிறகு, நாம் அவரோடுகூட புதிய பாத்திரத்தில் பானம் பண்ணுவோம் என்று அவர் அறிவித்தார்.

நாம் தற்போது உலகத்தின் ஏளனம் மற்றும் எதிர்ப்பினால் அவருடைய துன்பம் அவமானம் இகழ்ச்சி நிந்தைகளின் பாத்திரத்தில் பானம்பண்ணுகையில், அவருடைய புதியபாத்திரம், மகிழ்ச்சியின் பாத்திரமாக, ஆசீர்வாதம், மகிமை, கனம், சாவாமையாகிய தெய்வீக சுபாவமாக இருக்கும். நம் கர்த்தருக்கு உபத்திரவத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணும்படி ஊற்றின பிதா, அவருக்கு ஆசீர்வாதம் மற்றும் மகிமையின் பாத்திரத்தில் பானம்பண்ணவும் முன்கூட்டியே ஊற்றியிருந்தார். இந்த உபத்திரவமாகிய பாத்திரத்தில் நாம் அவரோடுகூட பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறபடியால், நம் உயிர்த்தெழுதலின் "மாறுதலிலும்", அவரோடுகூட மகிமை

### இம்மாத வெளியீட்டில்


| | | பக்கம் |
|---|---|---|
| ..... நினைவுகூருதலின் இராப்போஜனம் | ... | 1 |
| ..... உங்களால் கூடுமா? | ... | 4 |
| ..... விசுவாசத்தின் பூரண நிச்சயம் | ... | 8 |
| ..... யேகோவாவின் நற்குணம் அவரது திட்டத்தில்.. | ... | 13 |
| ..... திடம் கொண்டு முன்னேறு - கவிதை | ... | 16 |


லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்து கொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M-1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயமுத்தூர் – 6. செல் : 93441 44000

மற்றும் ஆசீர்வாதத்தின் பாத்திரத்தில் பங்குபெறும் சிலாக்கியம் பெற்றிருப்போம். ஆம்! நம் பாத்திரம் தற்போது, கசப்பும் இனிப்பும் கலந்ததாக இருக்கிறது. அவரை நேசிப்போர்க்கு அவர் ஆயத்தம் பண்ணியிருக்கிற அநேக காரியங்களை நாம் விசுவாசத்தினால் ஏற்கனவே அனுபவித்திருக்கிறோம்.

நம் கர்த்தருடைய ஏற்பாட்டில், யூதருடைய மேம்பாட்டு நிலையை சந்திரன் அடையாளப்படுத்துகிறது. சூரியன், சுவிசேஷயுகத்தின் மேம்பாட்டுநிலையை குறிக்கிறது. சூரியனின் கதிர்களின் பிரதிபலிப்பிலிருந்து சந்திரன் வெளிச்சம் கொடுப்பதுபோல், நியாயப்பிரமாண யுகப்பிரிவு, வருங்காலத்தில் வரவிருக்கிற காரியங்களுக்கு நிழலாக அல்லது பிரதிபலிப்பாக உள்ளது. நீதியின் சூரியன் தன் ஒளிக்கற்றைகளால் குணப்படுத்த உதிக்கும் நேரத்துக்கு மிக அருகாமையில் நாம் இருக்கிறோம். அப்பொழுது தேவனுடைய அறிவின் வெளிச்சமாகிய ஜலத்தினால் உலகை நிரப்புவார். இதைக் கண்டுணர்ந்து, நம் குரு வழிகாட்டுகிறபடி, நம் தலைகளை உயர்த்தி சந்தோஷமடைவோமாக. நீதியின் சூரியனில் உள்ளடங்கியவர்களாக, ஜெயங்கொள்ளுகிற சபையின் அங்கங்கள் அனைவரும் இருக்கிறபடியால், நம் கர்த்தருடைய உவமையில் குறிப்பிடப்பட்டபடி(மத்**13:43**), தெரிந்தெடுக்கப்பட்ட சபையார் கூட்டிசேர்க்கப்படுவது பின்தொடரும். மேலும் உலகின்மீது ஆயிரமாண்டு மகிமை பிரகாசிக்கும் முன்னர், அவளது மகிமை நிறைவடைந்திருக்கும்.

நினைவுகூறுதலில் தற்போது பங்கேற்கும்போது, நீதியின் சூரியன் எழும்புவதை விசுவாசக்கண்களில் நாம் நோக்கிப்பார்க்கிறோம். இந்நிலைமையை முதலாவது நினைவுகூறுதல் அனுசரிக்கப்பட்ட நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அந்நேரத்தில் முரண்பாடு நிலவினதை உணர்கிறோம். சந்திரன்(நியாயப்பிரமாண உடன்படிக்கை) அப்பொழுது முழுமையாயிருந்த வேளையில், இயேசுவை புறக்கணித்து அவரை சிலுவையிலறைந்தபிறகு, உடனடியாக, யூதருடைய ஆட்சிஅமைப்பு படிப்படியாகக் குறைந்தது. இயேசு சிலுவையிலறையப்பட்ட அந்நாளில், சந்திரன் முழுமையாய் பிரகாசித்தது, அதேசமயம் தேய்வடைவதும் துவங்கியது.

### தகுதியோடு அதை புசித்தலும் பருகுதலும்

நினைவுகூறுதலின் இராப்போஜனத்தால் ஒரு பெரும் ஆசீர்வாதம் வரவிருக்கிறது என்ற உண்மையை அடையாளப்படுத்துவதை புத்திக்கூர்மையோடு உணர்கிறோம். மேலும், அதில் கலந்துகொள்வோர் அடையும் மகிழ்ச்சியானது, அவரது விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் அளவுக்கேற்ப உள்ளது. அதேசமயம், தகுதியில்லாமல், பொருத்தமில்லாமல் பங்கேற்கிறவருக்கு சாபமும் இணைந்துள்ளது. கர்த்தரோடு தங்கள் இருதயங்கள் மற்றும் அனைத்தையும் அவருக்கும்அவரது ஊழியம் செய்வதற்கும் அர்ப்பணித்து, அவருடன் உறவுக்குள் வந்திருப்பவர்களைத் தவிர, ஒருவரும் இதில் பங்கேற்கக்கூடாது.

தாங்கள் பாவிகள் என்று தாங்களே உணர்ந்து, பாவத்திலிருந்து மீட்பவராக இரட்சகரை ஏற்றுக்கொண்டோரைத் தவிர, ஒருவரும் உடன்படிக்கையின் நிபந்தனைக்குள் வரமுடியாது. இரட்சகர் மூலமாக பிதாவினிடத்தில் வருகிறவர்கள் எல்லோருடைய குறைபாடுகளுக்கும் ஈடுகட்டுவதற்கு அவரது தகுதியே போதுமானது. இப்படிப்பட்ட எல்லோரும் பெருமளவிலான மகிழ்ச்சியுடன் இதில் பங்கேற்கவேண்டும். நம் குருவின் துன்பங்களை நினைவுகூரும்போது, அவைகள் தங்கள் இருதயங்களிலும் ஜீவியத்திலும் கொண்டுவருகின்ற அந்த துன்பங்களிலும் ஆசீர்வாதங்களிலும், அவர்கள் சந்தோஷமடைவார்கள். கிறிஸ்துவின் தியாகபலியின் புண்ணியத்தை மதித்துப்போற்றி, தாங்கள் அடைகின்ற ஆசீர்வாதங்களனைத்தும், அவர் மூலமாகவே வருகிறது என்று உணர்ந்திருப்போரைத்தவிர, இப்படிப்பட்ட தருணங்களில் திராட்சப்பழ இரசத்தில் பானம் பண்ணக்கூடாது. கர்த்தரிடத்தில் தங்கள் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து, தேவசித்தத்துக்கு முழுமையாக பணிந்துபோகிறவர்களைத் தவிர, வேறு ஒருவரும் இப்பாத்திரத்தில் பானம் பண்ணக்கூடாது. இது துன்பத்தின் பாத்திரம், மரணத்தின் பாத்திரம் என்பதையே இப்பாத்திரம் முக்கியப்படுத்துகிறது. “பிதாவே, என் சித்தமல்ல, உம் சித்தப்படியே ஆகட்டும்” என்பதே நம் குருவின் ஜெபமாயிருந்தது. நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்குபெறுபவர்களுடைய விண்ணப்பமும், உணர்வும் இப்படியாகவே இருக்கவேண்டும்.

இந்த நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் கலந்துகொள்ளும் மற்றவர்களுக்கோ, இது கேலிக்கூத்தாக இருக்கும், தவறானதாயிருக்கும், ஓரளவு சாபத்தைக் கொண்டுவருவதாக இருக்கும். அவர்கள் தங்களுடைய தவறான நடைமுறையைப் புரிந்துகொள்ளும் அளவுக்கேற்ப,

தேவனால் அவர்கள் நிராகரிக்கப்படுவதோடு, அவர்களுடைய சொந்தமனசாட்சியும் அவர்களை அங்கீகரிக்காது.

மாம்சத்தின் அபூரணங்களினிமித்தமாக, நினைவுகூறுதலிலிருந்து விலகியிருக்கவேண்டும் என்று ஒருவரும் எண்ணாதிருப்பார்களாக. அநேகருக்கு இது ஒரு பெரும் இடறுதலின் கல்லாக இருக்கிறது. நாம் மாம்சத்திலிருக்கிறவரையில், வார்த்தை செயல் சிந்தனைகளில் அபூரணங்கள் இருப்பது நிகழக்கூடியதே, இதை தவிர்க்கமுடியாது. நாம் செய்ய எண்ணியவைகளை நம்மால் செய்ய முடிவதில்லை என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். ஏனெனில் நம்முடைய அன்றாட, உள்நோக்கமில்லாத, மனப்பூர்வமற்ற மீறுதல்களுக்கு மன்னிப்பு அடைய தெய்வீக கிருபை நமக்கு தேவைப்படுகிறது. ஏற்கனவே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்து, கிறிஸ்துவோடு ஐக்கியத்துக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பவர்கள், ஜெபத்தில் பரலோக கிருபாசனத்தண்டை வரும்படிக்கு உற்சாகப்–படுத்தப்படுகிறார்கள். அப்போஸ்தலர் கூறுகிறார்; “நாம் இரக்கத்தைப்பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் ” – எபிரேயர் 4:16. ஏனெனில் நம் தேவைகளுக்காக தேவன் வழியைத் திறந்துவைத்து, இந்த ஏற்பாட்டை நமக்காக செய்திருக்கிறார்.

நம் பாவங்களை மன்னிப்பதற்கென தேவன் ஏற்பாடுசெய்திருக்கிறபடியால், அதனடிப்படையில் நாம் மனம்வருந்தி, இயேசுவின் நாமத்தில் நாம் மன்னிப்பு கோரினபோது இனியும் நாம் சாபத்தீர்ப்பின்படி பாவிகளல்ல என்று நாம் உணர்கிறோம், கிறிஸ்துவின் நீதியை ஆடையாக நாம் அணிந்துள்ளோம். இந்தக் கருத்தே அப்.பவுலின் வார்த்தைகளின் பின்னணியாக இருந்து, ஒவ்வொரு நாளும் நமக்கு பொருந்துகிறது;

“சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை” – ரோமர் 12:1.

கர்த்தரிடத்தில் எல்லா கிறிஸ்தவர்களும் தங்கள் கணக்குகளை நேர்மையாகக் காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் குறைவுபடுவார்களானால், அதை சரிசெய்ய காலந்தாழ்த்தக்கூடாது. இரட்சகரது பலியின் புண்ணியத்தின் மூலமாக மன்னிப்பை அடையவேண்டும். அவர்களுக்கு சம்பவிக்கும் நேரத்திலேயே, கர்த்தருடனான அப்படிப்பட்ட கணக்குகளை முறையாக ஒழுங்குபடுத்தவேண்டும். அவர்களுக்கு நேரிடும் காலத்துக்குப் பின்னர் அல்ல. குவியலாகும்படி அவர்கள் அவற்றை அனுமதிக்கக்கூடாது. அவர்கள் தங்கள் ஆத்துமாவுக்கும், பரலோகப்பிதாவுக்குமிடையே சுவரை எழுப்பிக்கொள்வார்கள். ஆனால் கடந்தகாலத்தில் நிலைமை எப்படி இருந்திருந்தாலும், நினைவுகூறுதலின் காலத்தில், மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தருக்கும் நமக்குமிடையே, அவருடைய கண்களிலிருந்து நம்மை மறைக்கும் எந்த மேகமும் மீந்திராதபடி நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டிய நேரம் இதுவாகும்.

இவ்வாறு மன்னிக்கப்பட்ட, இவ்வாறு எந்தக் கரையுமின்றி சுத்திகரிக்கப்பட்ட நம்முடைய கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தோடு, நம் கர்த்தரின் மரணத்தை நினைவுகூறும் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். அவருடைய பலி மற்றும் மரணம் ஆகியவற்றின் புண்ணியத்தின் முக்கியத்துவமானது, எப்படி தேவகிருபையை பிரதிபலிக்கிறது என்றும், இது ஆயிரமாண்டு அரசாட்சியின்போது எப்படி முழு உலகிற்கும் அதே கிருபையை படிப்படியாக நீட்டிக்கச்செய்யும் என்றும் நம் சிந்தைகளில் மீண்டும் ஏற்றுக்கொண்டு, மனதில் பதியவைப்போமாக. நம் கர்த்தரோடுகூட ஞானஸ்நானத்தில் மரித்திருக்கிறோம் என்றும், அவரது சரீர அங்கங்களாக பிட்கப்பட நாம் நம்மை அர்ப்பணித்திருக்கிறோம் என்பதையும், ஒரே அப்பத்தின் பல பாகங்களாக, அவருடைய துன்பம், அவமானம் மற்றும் மரணத்தின் பாத்திரத்தில் பானம்பண்ணவும் பங்குபெறுவதை நினைவுகூர்வோமாக. “நாம் அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்...” – 2தீமோத் 2:12.

எப்புறமும் இருக்கிற கர்த்தருடைய உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிற ஜனங்கள் அனைவரும், இந்த வருடத்தின் நினைவுகூருதலை அனுசரிக்கும்போது, அபரிதமான ஆசீர்வாதத்தை ஆழமாக உணர்ந்துகொள்வார்கள் என்று நாம் நம்புகிறோம்.“நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால்.. பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்” – 1கொரிந்5:7.

-----------------------

**R 5421**

# "உங்களால் கூடுமா?"

# "ARE YE ABLE?"

**நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க உங்களால் கூடுமா ? –** மத்தேயு20:22.

நம்முடைய இரட்சகரால் கூறப்பட்ட இந்த வார்த்தைகளின் சூழ்நிலையை நாம் நினைவுக்குக் கொண்டுவருவோம். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு இச்சம்பவம் நடந்தது. அவருடைய சீஷர்கள் அவருடைய இராஜ்ஜியத்தில் அவருடைய சிங்காசனத்தில் அவருடன் உட்காருவார்கள் என்று அவர்களுக்கு இயேசு வாக்களித்திருந்தார். அவர் கூறியதுபோலவே இருக்கும் என மிகவும் நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள், தாங்கள் வகிக்க இருக்கிற ஸ்தானத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய இரு சீஷர்களின் தாயார் இயேசுவினிடத்தில் வந்து, தன்னுடைய இரண்டு குமாரர்களும் இராஜ்ஜியத்தில் அவருடைய வலதுபுறத்தில் ஒருவரும், இடதுபுறத்தில் ஒருவருமாக அமரக் கூடுமா என்று கேட்டார். இயேசு அந்த இரண்டு சீஷர்களிடமாகத் திரும்பி; "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க உஙகளால் கூடுமா ? நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா ? என்று கேள்வி கேட்பதன் மூலமாக பதிலளித்தார்.

இயேசுகிறிஸ்துவின் தண்ணீரில் மூழ்கும் ஞானஸ்நானம் அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் இருந்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக அவர் மனிதர்களின் மீட்பராக மரிக்கவேண்டியிருந்தது. அவர் முப்பது வயதானவுடன், அதாவது நியாயப்பிரமாணத்தின் கீழ் சாத்தியமான வயதை எட்டினவுடன், இந்த மரணத்தை அடையாளமாக தெரிவித்தார். அவருடைய ஊழியத்தின் 31/2 வருடங்களில், இந்த ஞானஸ்நானத்தை நிறைவேற்றி முடித்து, தம் ஆத்துமாவை மரணத்திலூற்றினார். இந்த மரணத்தை அவர் கல்வாரியில் நிறைவேற்றி முடித்தார். "நான் பெற்ற ஞானஸ்நானத்தை"– அதாவது கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ உள்ள ஞானஸ்நானமல்ல, தற்போது என்று இயேசு கூறுகிறார்.

ஆனால் "நான் குடிக்கப்போகும் பாத்திரத்தில்" என்று பாத்திரத்தைக் குறித்து வேறுவிதமாகப் பேசினார். இவ்வாறு அவர் அந்தப் பாத்திரம் எதிர்காலத்திற்குரியது – அதாவது தற்காலத்திலோ அல்லது கடந்த காலத்திலோஅல்ல என்பதை சுட்டிக் காட்டுகிறார். எருசலேமிற்கு போகப்போவதாயும், அங்கு அவர் சிலுவையில் அறையப்படுவார் என்றும், மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார் என்றும் அவர் தம் சீஷர்களிடத்தில் கூறியிருந்தார். மேலும் மற்றொரு தருணத்தில், "நீங்கள் மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கூறியிருந்தார். போதகர் தாம் சிலுவையில்அறையப்படுவதைப் பற்றி என்ன கூறினார் என்று அந்த சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இயேசு அந்த சூழ்நிலையைப் புரிந்தவராக, இந்த பாத்திரம் தமக்காக ஊற்றப்படஇருக்கிறது என்பதையும் அறிந்திருந்தார். மேலும் அவர் மறுபடியும் அதைக்குறித்து."என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" என்று தம்மைக்குறித்துச் சொன்னார்.

**நம்முடைய கர்த்தரின் விசேஷித்த சோதனை**

பாத்திரம் என்ற வார்த்தை, ஜீவியத்தின் பல்வேறு அனுபவங்களைக் குறிக்கிறது. அதாவது ஒவ்வொருவரும் சந்தோஷம் மற்றும் உபத்திரவம் கலந்த தங்கள் பாத்திரத்தை கொண்டுள்ளனர் என நாம் அந்த வார்த்தையைக் குறித்து சிந்திக்கலாம். ஆனால் இயேசு அந்த வார்த்தையை வேறுபட்ட அர்த்தத்தில் பயன்படுத்துகிறார். அவர் கெத்செமனே தோட்டத்தில் இருந்தபோது, "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தப்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபித்தார். மறுபடியுமாக அதே இரவில், "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக் கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று சொல்லி ஜெபித்தார். நம் கர்த்தருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் குறித்த விஷயத்தில் அவர் தரப்பில் எந்த தயக்கமும் இல்லை. அதற்கு மாறாக, வெகு துவக்கத்திலிருந்தே அதில் அவர் தாமாக முன்வந்து பங்கெடுத்தார். அந்த அவமானமான மரணத்தையே, நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று அவர் ஜெபித்தார். ஆனால் இப்படிப்பட்ட அவமானமான மரணமே தமக்கான தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்று அறிந்ததும், அதைப் பெறுவதில் அவர் திருப்தியடைந்தார்.

நம் கர்த்தர் தெய்வீகப் பிரமாணத்தை தூஷித்தவராக மரணதண்டனை பெறவேண்டும் என்று சுட்டிக்காட்டுவதற்கு நியாயப்பிரமாணத்தில் ஒரு காரியமும் இல்லை. இருப்பினும் தேவதூஷணமே அவருக்கு எதிரான குற்றமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என அவர் கூறியதிலும், அதோடு தம்மை தேவனுடைய குமாரன் என்று உரிமை கோரியதிலும், இயேசு தேவதூஷணம் செய்தார் என ஆலோசனை சங்கத்தார் முடிவு செய்தனர். அப்போது, வெளிப்படையாகவே தாம் ஒரு குற்றவாளியாக, தாம் மிகவும் நேசித்த பிதாவை தூஷித்தவராக சிலுவையில் அறையப்படுதலில் உள்ள அவமானம் மற்றும் நிந்தையிலிருந்து விடுவிக்கப்படவே இயேசு விரும்பினார்.

இயேசு தாம் மரிப்பதற்காகவே இந்த பூமிக்கு வந்ததையும், தாம் பாடுபடவேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். ஆனால் அவர் அவமானம் அடைதலாகிய இப்பகுதியை அவர் முழுமையாக புரிந்திருக்கவில்லை. "சர்ப்பமானது மோசேயினால் வனாந்திரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் உயர்த்தப்படவேண்டும்" என்பதை சான்றுப்படி அவர் அறிந்திருந்தார். தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே நிக்கொதேமுவுடனான உரையாடலில் இந்த வார்த்தைகளை அவர் கூறியிருந்தார். ஆனால் அவரை இழிவுபடுத்தப்படவும், அவமதிக்கப்படவுமான நேரம் நெருங்க நெருங்க, இவை எல்லாம் அவற்றையே அர்த்தப்படுத்துவதை உணர்ந்து, அதிலிருந்து சிறுமைப்படுவதை அவர் உணர்ந்து, "இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று கதறி, தன் இருதயத்தை ஊற்றினார். ஆனால் உடனடியாக, தம்முடைய அர்ப்பணிப்பின்போது உறுதியளித்திருந்தபடி; "பிதாவே, இதோ உம்முடைய சித்தம் செய்ய விரும்புகிறேன்" என்றுகூறியது வெறும் வெற்று வார்த்தைகள் அல்ல என்பதை நிரூபிப்பதற்காக, "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல,, உம் சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்பதையும் சேர்த்துக் கூறினார் – மத்23:39.

**நாம் அவருடைய அவமானத்தில் பங்குகொள்ள விரும்புகிறோமா ?**

நம் இரட்சகர் தம்முடைய சீஷர்களுக்கு இப்படியாக சொல்கிறார் : உங்கள் ஜீவன்கள் எடுக்கப்படுவது அநீதியாகத் தோன்றும் என்று அர்த்தப்படுத்தினாலும், உங்கள் ஜீவன்களை முழுமையாக ஒப்புக்கொடுக்க உங்களால் கூடுமா ? நான் குடிக்கும் பாத்திரத்தில் குடிக்க உங்களால் கூடுமா ? எல்லாவற்றிலும் இழிவும் அவமானமும் தொடர்புடையதாக இது இருக்கும். இதில், என் பாத்திரத்தில் என்னோடு பங்குபெற விரும்புகிறீர்களா ? என்று கேட்கிறார். அவர்கள் "எங்களால் கூடும்" என்று பதிலளித்தார்கள். அவர்கள் விருப்பத்துடன் இருந்தனர்.

இதே பாத்திரம் தான் இராப்போஜன சடங்கின் பாத்திரத்தை அடையாளப்படுத்துவதை நாம் காண்கிறோம். அந்த அப்பம் நம் கர்த்தரின் சரீரத்தையும், திராட்சை ரசம் அவருடைய இரத்தத்தையும் அடையாளப்படுத்துகிறது. அந்த பாத்திரம் அவருடைய மரணத்துடன் தொடர்புடைய அவமானம் மற்றும் நிந்தையை விசேஷமாக அடையாளப்படுத்துகிறது. அந்த இரண்டு சீஷர்களும் அவருடைய பாத்திரத்தில் பங்குபெற விரும்புவதாக, எந்த தயக்கமுமின்றி கூறினர். என்ன வந்தாலும் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கவிரும்பினர். அவர் எந்த நிபந்தனைகளை வைத்தாலும் அதற்கு இசைந்துபோக விரும்பினர். நிச்சயமாக, ஞானஸ்நானம் அல்லது பாத்திரம் என்ற வார்த்தையின் உட்கருத்தை, இன்னும் அவர்கள் முழுமையாக அறிந்துகொள்ளவில்லை. அவருடைய சீஷர்கள் அனைவருடைய பிந்தைய உணர்வுகள் இவைகளாகவே இருந்தன. பெந்தெகொஸ்தே நாள் வரும்போது, அவர் முன்னுரைத்திருந்ததுபோல, இயேசு அவர்களிடம் பேசியிருந்த இந்த விஷயங்கள் அவர்கள் நினைவுக்கு வரும்(யோவா16:4; 13:19). ஆனால் அவர்கள் விருப்பத்துடனும் வாஞ்சையுடனும் காணப்பட்டனர். இப்படியாகவே நாமும் இருக்கவேண்டும். விருப்பமுள்ளவர்களாக இருக்கும்போது, அவர்கள் இந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்று இயேசு உறுதியளித்தார். அவர்கள் தொடர்ந்து விருப்பங் கொண்டிருந்து, அவருடன் இங்கு தொடர்ந்து பாடுபடுவார்களானால், அவருடைய சிங்காசனத்தில் அவருடன் ஆளுகை செய்வர். ஆனால் சிங்காசனத்தில் ஒவ்வொருவருக்குமான குறிப்பிட்ட ஸ்தானத்தைப் பற்றி சொல்வது அவருக்குரியது அல்ல, மாறாக பிதாவுக்குரியதாகவே இருக்கிறது.

இடுக்கமான வழியில் நடந்த நம் மீட்பருடைய தைரியம், மனவலிமை நம்மை வியப்பில்ஆழ்த்துகிறது. அவருடைய குணாதிசயம், பலமுள்ளதாயும், துணிச்சலுள்ளதாயும் இருக்கிறது. பின்னிட்டுப் பார்ப்பதற்கான எந்த சிந்தையையும் அவர்

கொண்டிருக்கவில்லை. அவருடைய முழு நோக்கமும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதன்மேலேயே – அதாவது, உலகத்தின் நலனுக்காக தம்மை பலிசெலுத்துவதன்மேலேயே இருந்தது. அப்போஸ்தலர்களுக்கு முன்னால் எப்படிப்பட்ட ஒரு உயர்ந்த மாதிரி அமைக்கப்பட்டிருந்தது! – அதாவது, மிகுந்த அடக்கம், சுயத்தை முழுமையாக சரணடையச் செய்வதன் மூலமாக ஜெயங்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான ஒரு உயர்ந்த மாதிரி அவர்கள் முன் வைக்கப்பட்டுள்ளது!.

**சபை கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுதல்**

கர்த்தருடைய பாத்திரத்தில் சபை பானம்பண்ணுதல் என்பது இந்த தற்காலத்தில் கிறிஸ்துவின் பாடுகளில் நம்முடைய பங்குபெறுதலைக் குறிக்கிறது. இப்போது முறையான நிபந்தனைகளின்கீழ் வராதவரை, எவரும் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தரின் சரீர அங்கமாக முடியாது. பிறகு, இரத்தத்தை பானம்பண்ணுவது என்பது, பாத்திரத்தில் பங்கெடுத்தல் ஆகும். அவருடைய பாத்திரத்தில் நாம் பானம் பண்ணவில்லையென்றால், அவருடைய மகிமையில் அவருடன் பங்குபெறவும் முடியாது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று அவர் கூறினார். அனைவரும் பானம்பண்ணவேண்டும், இந்த யுகத்தின்போதே முழு பாத்திரமும் காலியாகவேண்டும்.

நாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பது, ஒரு மாபெரும் சிலாக்கியம். "நாம் அவரோடேகூட பாடுபட்டால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்". புதிய யுகப்பிரிவு திறக்கப்படும்பொழுதும், அதன் ஆசீர்வாதங்களை வழங்குவதிலும் நாம் பங்குபெறுவோம். இரத்தத்தை தெளிக்கும் நிஜமான மோசே, மகிமையடைந்த தலையும் அவருடைய சரீரமாகிய சபையும் சேர்ந்த கிறிஸ்துவாக இருக்கிறார். அவரைப்பற்றி அப்போஸ்தலர்3:22இல், "மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்" என்று வாசிக்கிறோம். அதாவது, மோசே ஒரு சிறிய அளவில் அவருடைய நிழலாய் இருந்தார் என்பதை குறிக்கிறது. சரீரமானது தற்போது எழுப்பப்பட்டு வருகிறது. இயேசு முதலாவது உயிர்த்தெழுப்பப்பட்டார், பின்னர் எல்லா அப்போஸ்தலர்கள், பின்பு அதைத்தொடர்ந்து, மீதமுள்ள அவருடைய சரீர அங்கத்தினர் எழுப்பப்படுவார்கள்.

அன்று மோசே எல்லா ஜனங்கள் மீதும் தெளித்ததுபோல, இந்த நிஜமான மோசே நிறைவடையும்போது, உலக மனுக்குலம் அனைத்தின்மீதும் தெளிப்பார். இது அவர்களை தெய்வீக பிரமாணத்துடனான இசைவுக்கு கொண்டுவருவதை அர்த்தப்படுத்துகிறது. மனுக்குலத்தின்மீது தெளிப்பதற்கு ஆயிரம் வருஷங்கள் தேவையாயிருக்கிறது. எனவே பாத்திரத்தில் குடிப்பதற்கும், இரத்தத்தை தெளிப்பதற்கும் மாபெரும் வித்தியாசம் இருக்கிறது. இரத்தத்தை தெளிப்பது என்பது நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கிறது. அதேசமயம், சபையார் பாத்திரத்தில் பானம்பண்ணுதல் நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்ல, பரிசுத்தமாகுதலையும் குறிக்கிறது.

**தெய்வீக நோக்கங்களை நம் கர்த்தர் அடையாளங் கண்டுகொள்ளுதல்**

நம் கர்த்தர், பரிசுத்த பேதுருவுக்கு நினைவில் நிறுத்தும் வார்த்தைகளாக கூறுகிறார்; "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனா?" என்று அவர் கூறியது, தம்முடைய மரண அனுபவங்களின் கடுமையான உச்சகட்டத்தையே சாட்சியகரமாக குறிக்கிறது. அவர் மனுஷரால் அவமதிக்கப்பட்டு, தேவதூஷணம் செய்தவராக, தேவனுடைய எதிரியாக எண்ணப்பட்டார். சரீரப்பிரகாரமான பாடுகள் கடுமையானதாக இருக்கும் என்று அவருக்குத் தெரியும். ஆனால் அவருடைய பரிபூரண மனதிற்கு அந்த அவமானமும், விலகியிருத்தலும், அந்த அவப்பெயரும் அவருடைய வேதனையின் கடுப்பை இன்னும் அதிகம் கூட்டுவதாக இருந்தது. எனினும் இதுவே பிதா அவருக்குக் கொடுத்த பாத்திரமாக இருந்தது, இதுவே அவரைக்குறித்த தெய்வீக நோக்கமாகவும் இருந்தது.

நம் கர்த்தர் தம்முடைய உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்கும்,சோதிக்கப்படுவதற்கும் அவசியமாக, இந்த எல்லா அனுபவங்களையும் பெற்றிருந்தார். அவர் தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக தம் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தி காண்பிப்பதற்காக இது அவசியமாயிருந்தது. இந்த முழு காரியமும் மனிதனுடைய சிருஷ்டிப்புக்கு முன்னிருந்தே தெய்வீக ஏற்பாடாக இருந்தது. அவர்,"உலகத் தோற்றத்துக்குமுன்பே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக" இருந்தார்(வெளி13:8). அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியைக் குறித்த அனைத்தும்

பிதாவினால் முன்னமே அறியப்பட்டிருந்தது. மனிதனை மீட்கும்பொருட்டு, இவ்வாறு உண்மையுள்ள, இரக்கமுள்ள பிரதான ஆசாரியராக இருக்கும்படியாகவும், இயேசு பாவிகளுக்கு உரியதான பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டியதாயிருந்தது. இது பாடுகள் மற்றும் மரணத்தின் பாத்திரமாயிருந்தது. யூதரை மீட்கும்பொருட்டு, இயேசு சிலுவையின் மரணத்தை அடைவது அவசியமாயிருந்தது.

**கீழ்ப்படுத்தி ஒப்புவித்தலால் வெளிப்படுத்தப்பட்ட அன்பு மற்றும் உண்மைத்தன்மை**

அவருடைய பாடுகள் அனைத்தும் வேதத்தில் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. வனாந்திரத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தினால், சிலுவையில் அறையப்படுதல் உருவகப்படமாக காட்டப்பட்டிருந்தது. அவருடைய அனுபவங்கள் அனைத்தும் முன்னறியப்பட்டதாக, முன்னேற்பாடு பண்ணப்பட்டதாக, அவசியமானதாக இருந்தது. பிதாவின் சித்தத்தை செய்வதற்கு பூமிக்கு அவர் வந்தபோது, வரவிருக்கிற எல்லாவற்றையும் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை.ஆனால் அவர் பட்ட பாடுகளினாலும், ''புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவைகளின் மூலமாகவும் அவர் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். பிதாவின் சித்தம் அனைத்திற்கும் அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார். இவ்வாறு தம்முடைய உண்மைத்தன்மையை நிரூபித்தார். ''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே வந்தேன்'' என்று அவரே தம்மைப்பற்றி அறிவித்தார். அவருடைய பலி பட்சிக்கப்படும் நேரம் நெருங்கினபோது, கெத்செமனேயின் தனிமையில்,''பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்'' என்று நம் போதகர் ஜெபித்தார். மரணத்தின் பாத்திரம் கடந்துபோவதற்காக அவர் ஜெபித்தார் என்று நாம் கருதக்கூடாது; மாறாக, சிலுவையில் அறையப்படுதலின் அவமான அனுபவங்கள் கடந்துபோகக் கூடுமோ? இல்லையோ? என்ற வியப்பிலிருந்தார். எனினும் அவர் முறுமுறுக்கவோ அல்லது கிளர்ச்சிசெய்யவோ இல்லை. மாறாக, ''என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' என்று கூறியதையே நாம் காண்கிறோம்.

**நம்முடைய பாத்திரத்தின் மீதான விசேஷ மேற்பார்வை**

நம் பிரியமான கர்த்தர் கசப்பின் பாத்திரத்தின் அடிவண்டல் வரை பருகினார். அதை மிகுந்த நன்றியுடன் பருகினார் என்பதை நாம் காண்கிறோம். நாம் அனைவரும் அதில் பானம்பண்ணும்படி அந்த பாத்திரத்தை நமக்கும் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் எல்லோரும் அவருக்கு இருந்த அதே துல்லியமான அனுபவங்களை பெறுவதில்லை, மாறாக, பிதாவின் சொந்தவழியில் நாம் அனைவரும் அந்த பாடுகள் மற்றும் மரணத்தின் பாத்திரத்தைப் பருகவேண்டும். இயேசு பரிபூரணமானவராயிருந்தபடியால், பிதாவாகிய தேவன் அவரை மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் கையாண்டார்.

நம்முடைய விஷயத்தில் அந்த அனுபவங்கள் வித்தியாசமானதாக இருக்கும். நம்முடைய அபூரணத்தின் நிமித்தமாக, பரிபூரண நிலைப்பாட்டிலிருந்து நாம் கையாளப்படமுடியாது. எனவே நம் போதகருக்கு, குறிப்பிட்ட திட்டம் நிர்ணயிக்கப்பட்டிருந்ததுபோல் நம்முடைய பாத்திரத்தைப்பற்றி நாம் சிந்திக்கக்கூடாது. அதற்கு மாறாக, தம்முடைய குமாரனுடன் மரணத்தின் பாத்திரத்தில் ஒரு பங்கை பெறுவதற்கு பிதா நம்மை அனுமதித்திருக்கிறார். நம்முடைய பாத்திரம் பிதாவினால் ஊற்றப்பட்ட பாத்திரமாயிருந்தாலும், அது நம்முடைய மீட்பரால் மேற்பார்வையிடப்படுகிறது. இது பிதாவின் திட்டமாக இருக்கிறது.

போதகருடைய விஷயத்தில் அந்தப் பாத்திரம், முழு உலகத்தின் பாவத்திற்காக அவசியமானதாக இருந்தது. நம் விஷயத்தில் அது அவசியமானதாக இல்லை. ஆனால் நம்முடைய கர்த்தரின் பாடுகளிலும் மகிமையிலும் ஒரு பங்கை நமக்கு அளிப்பது பிதாவுக்கு பிரியமாய் இருந்தது. இயேசு நம் குறைகளை நிறைவாக்கி, நம் குணலட்சணங்களை வளரச்செய்து, அவருடைய சொந்த மகிமையுள்ள சாயலுக்கு நம்மை உருவாக்குகிறார். நம்முடைய பாத்திரத்தின் மீதான நம்முடைய கர்த்தரின் இந்த மேற்பார்வை இல்லையெனில், நாம் அநேக பண்புகளில் மிகவும் குறைவாகவே வளர்ச்சியடைந்திருப்போம். எனவே நம்முடைய பாத்திரம் விசேஷமாக மேற்பார்வையிடப்படுவது அவசியமாயுள்ளது. எனவே அவசியமான அனுபவங்கள் நமக்கு வரும்போது, அதே சமயத்தில் அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாக இருக்கும் என்று அவர் உறுதியளிக்கிறார். நம்முடைய பெலவீனத்திலே அவருடைய பெலம் பூரணமாய் விளங்கும்என்றும், சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கும் என்றும் நமக்கு உறுதியளிக்கிறார்.

நாம் அவருடைய பாத்திரத்தில் பங்கெடுக்காதவரை, நாம் அவருடன் மரணத்தில் மூழ்காதவரை, அவருடைய மகிமையான இராஜ்ஜியத்தில் பங்குபெறமுடியாது. அவருடைய சிங்காசனத்தில் அவருடன் அமரமுடியாது என்பதை ஒருபோதும் மறவாதிருப்போமாக. இந்த விலையேறப்பெற்ற முத்தை அடையத்தக்கதாக, இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தையும் குப்பையும் தூசுமாக எண்ணுவோமாக. பாடுகளின் அனுபவங்கள் நமக்கு வரும்போது, நாம் பயப்படாதிருப்போமாக. மேலும், "நம்மை சோதிக்கும்படி நம் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" இருப்போமாக. நம்முடைய அன்புக்குரிய போதகருடன் இப்போது பாடுபடுவதற்கும், பின்னர், படிப்படியாக அவருடன் நித்திய இராஜ்ஜியத்தில் மகிமையடைவதற்குமே "நாம்அழைக்கப்பட்டிருக்கிறோம்"!

உன் பக்கத்தில் நண்பனும் இல்லை,
நீ தங்குவதற்கு புயமும் இல்லை,
குறுகலான, கடினமான வழியில் நடப்பதற்கு
உன்னால் கூடுமா ?
காரிருளின் இரவின் வழியாக
துணிச்சலோடு செல்ல உன்னால் கூடுமா ? – அங்கே
கர்த்தர் ஒளியை அனுப்பும்வரை
பொறுமையோடு காத்திருக்க உன்னால் கூடுமா ?

"ஆ, இவ்வாறு இருந்தால் அவர் ஊற்றும் பாத்திரத்தில் உன்னால் குடிக்கமுடியும்.
சத்தியத்தின் கொடியை நீ
ஒருபோதும் கீழாக்கவில்லையெனில்,
அவருடைய அன்பிற்குரியவனாய் நீ இருக்கிறாய்,
அவருடைய கிரீடத்தை நீ அணிந்துகொள்வாய்,
அவருடைய சிங்காசனத்தில் நீ அமருவாய்,
அவருடைய மகிமையில் பங்கடைவாய்! "

————————

**R 5424**

# "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு செல்வோமாக !"

# "LET US GO ON 'IN FULL ASSURANCE OF FAITH'

"தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர்
நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி
நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்,
சுத்த இருதயத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்,
உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண
நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" – எபிரேயர் 10:21,22.

அப்போஸ்தலர் பவுல் சபை வகுப்பாரின் கவனத்தையே ஆதார வசனத்தின்மூலம் ஈர்க்கிறார். குறிப்பாக அந்நாளில் யூதர்களுக்கான ஏற்பாடுகளைப்பற்றி நன்கு பரீட்சயமானவர்களின் கவனத்தையே ஈர்க்கிறார். உண்மையாகவே ஆரோனுடைய ஆசாரியத்துவம் நிழலான ஒன்றாக இருப்பதுடன், குறிப்பிட்ட காலத்துக்கு மாபெரும் காரியங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, லேவி குடும்பத்திலிருந்து வந்த ஆரோனுடைய ஆசாரியத்துவத்திலிருந்து தேவனுடைய நிஜமான திட்டமானது செயல்படுத்தப்படுவதில்லை. மேலும் அவர்கள் செலுத்தின காளை மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் பலிகளால் பாவங்களை நீக்க முடிவதில்லை. ஆனால் வருடாவருடம் செய்யப்படும் இந்த ஏற்பாடானது தேவனுடைய நிழலான ஜனங்களை அவர்களுடைய உடன்படிக்கையின் மூலம் மூடி பாதுகாக்கிறதாயிருக்கிறது. மெல்கிசேதேக்கின் முறையின்படியான மாபெரும் ஆசாரியத்துவத்தைப் பற்றி அப்போஸ்தலர் கோடிட்டுக் காட்டுகிறார். அம்முறைமையின்படி நம்முடைய கர்த்தர் அதற்கு தலையாகவும், சுவிசேஷயுக சபையானது அவருடைய அங்கத்தினர்களாகவும், உடன் ஆசாரியர்களாகவும் இருக்கின்றனர். ஆரோனையும் அவருடைய குமாரர்களையும் வைத்து தேவன் ஏற்பாடு செய்த ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேலான ஒரு ஆசாரியத்துவம் ஏன் தேவைப்படுகிறது என அவர் வினவுகிறார். ஏனெனில் அவர்களே பாவிகளாக இருப்பதுடன், பாவத்தை மெய்யாகவே நீக்க முடியாதவர்களாக இருந்தனர். மேலும் அந்த மிருகங்களுடைய இரத்தமானது நிஜமான புண்ணிய

கிரயத்தைப் பெற்றிருக்கவில்லை.அந்த ஆசாரியர்கள்கூட ஒருபோதும் தேவனுடைய உண்மையான தயவை மீண்டும்பெறவில்லை. அவர்கள் வெறுமனே நிழலான பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றனர்.

ஆனால் நாமோ, இந்த புதிய ஆசாரியத்துவத்தின் முறைமையின்படி, கிறிஸ்துவை தலையாக பெற்றிருக்கிறோம். இந்தமுறைமையின்படி, உடன்ஆசாரியர்களாக நம்முடைய ஸ்தானத்தை உணருவோமாக. நம்முடைய பிரதான ஆசாரியர் மெய்யான மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருக்கிறார். இதற்கான ஆதாரமானது பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்தின் மூலம் வருகிறது. எவ்வாறெனில், நம்முடைய கர்த்தரின் பலியானது பிதாவானவருக்கு மிகவும் ஏற்றதாயிருந்ததுடன், அதுமுதல் நாமும்கூட தேவனிடத்தில் நெருங்குவதற்கு எல்லாக் காரியங்களும் தயாராகி, நம்மை அனுமதித்தோடு, நம்முடைய மீட்பரின் அனுபவங்களில் பங்குபெற்று, அதன்மூலம் நாம் பின்னாளில் திரைக்கு அப்பால் சென்று, அவருடைய மகிமையில் பங்கடைவோம். இவ்வகையில் தேவனுடைய கிருபையுள்ள ஏற்பாடுகளை காணும்போது, ஆரோனுடைய கூடாரத்துக்கு பதிலாக நாம்அதற்கும்மேலான தேவனுடைய வீடாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். எனவே நாம் உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும் சேரக்கடவோம்.

பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்படி உடன் ஆசாரியர்கள் அனுமதிக்கப்பட்டனர். பாவநிவாரண நாளுக்குப்பின், மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தனர். இந்த சுவிசேஷயுகத்தில் தேவனோடுகூட அர்ப்பணிப்பை செய்து, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட அனைவரும் முதலாம் கூடாரமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் உள்ளனர். ஆரோனும் அவருடைய குமாரரும் மெய்யான ஆசாரியத்துவத்துக்கு நிழலாக இருப்பினும், நாம் ஆரோனுடைய முறையின்படி அல்ல, நாம் ஆரோனுடைய ஆசாரியத்துவத்தின் அங்கத்தினர்களாக அல்ல, மாறாக, மகா பிரதான ஆசாரியரின் கீழாக மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அங்கங்களானோம். “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்’’ – **1பேது2:9.**

**உண்மையுள்ள இருதயங்களோடு சேரக்கடவோம்**

இவ்வாறாகப் பார்க்கும்போது, தேவன் ஏற்படுத்திய இந்த ஏற்பாட்டின்மேல் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகி, முறையான சில படிகளை எடுப்பதில் உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாகி நிஜமான அர்ப்பணிப்பின்மூலம் நம்முடைய சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க முன்வந்து, அதன்மூலம் பரிசுத்தஆவியின் மூலம் ஜெநிப்பித்தலைப் பெறுகிறோம். இப்படியாக இப்புதிய ஆசாரிய முறையின்படி நம்முடைய வேலைகளை துவங்குவோமாக. நிறைவேற்றவேண்டிய மாபெரும் காரியங்கள் உள்ளன, தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஒவ்வொரு வேலையிலும் நாம் முழு பங்கு பெறுபவர்களாக இருந்து, அவரோடுகூட நாம் முற்றிலும் சேர்வோமாக. நம்முடைய இரட்சகரின் புண்ணியக்கிரயத்தினால் நாம் மூடப்படுகிற அருமையான ஏற்பாடு எத்தனை அருமையானது! நம்முடைய ஆசீர்வாதங்கள் எத்துணை அருமையானவைகள் என நாம் உணர்ந்து, உண்மையான இருதயங்களோடு சேரக்கடவோமாக. தேவனோடுகூட நாம் நுழைந்த இந்த உடன்படிக்கைக்கு உண்மையும் நேர்மையானவர்களாக இருப்போமாக.

‘‘பலியினாலே என்னோடுகூட உடன்படிக்கைசெய்த என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்’’ (சங்50:5) என்கிற இந்த உடன்படிக்கைக்கு கீழான கர்த்தருடைய அழைப்பு இதுவேயாகும். இந்த அழைப்பு அல்லது அழைப்பிதலானது சுவிசேஷயுக முழுவதும் சென்றுகொண்டிருக்கிறது. இந்த உடன்படிக்கைக்குள் நுழைந்த பரிசுத்தவான்கள் அனைவரும், கிறிஸ்துவின் பலியில் பங்குள்ளவர்களாயும், அவரோடுகூட உடன்வேலையாட்களாகவும் இருக்கும்படியான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றனர். விசுவாசத்தின் பூரணநிச்சயத்தோடு சேரக்கடவோம் என்றால், தேவனுடைய எந்தவொரு வாக்குத்தத்தமும் உண்மையானவையும், நமக்கானவையுமாய் இருக்கிறதினால் அவைகளைக்குறித்த எவ்வித சந்தேகமுமில்லாதவர்களாக இருப்பதாகும். அப்போஸ்தலர் கூறுகின்றபடி, தற்கால வாழ்க்கையில் பலிசெலுத்துவதினால் எந்தவொரு பயனும் இல்லை என உலகம் காண்பதுடன், அவர்கள் நம்மை முட்டாள்களாக எண்ணுகின்றனர்.

இருந்தபோதிலும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு நாம் செல்வோமாக. எனவே நம்முடைய மகா பிரதான ஆசாரியரோடு இணைந்து அவருடைய இளைப்பாறுதலில் நாம் பங்கடையும்வரை, பாதையின் கடைசிவரை உண்மையாக முன்னேறிச் செல்வோமாக.

**அவருக்குள்ளாக அபிஷேகம் பெறுதல்**

பிரதான ஆசாரியனுடைய அபிஷேகமானது அவ்வேலைக்கான தெய்வீக நியமனத்தைக் குறிக்கும் நிழலாகும். அவ்வாறே ஆரோன் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டார். “ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை என அப்.பவுல் கூறுகிறார். கிறிஸ்துவும்கூட இந்த கனமான ஊழியத்திற்கு தம்மைத்தாமே உயர்த்தவில்லை. தேவனே அவரை நியமித்தார். அதைப்பற்றி; “மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நீர் என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்கிறார்((எபி5:4–6). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு தேவன் நேரடியான தொடர்புகொண்டிருந்தார். தேவன் அவருக்கு தமது பரிசுத்தஆவியை முழுஅளவில் அளித்தார். தேவன் தமது ஆவியை அவருக்கு அளவில்லாமல் தந்திருக்கிறார் என இயேசுவே கூறுகிறார். ஏனெனில் பரிசுத்தஆவியை முழுஅளவில் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலை அவர் பெற்றிருந்தார். அவருடைய அங்கத்தினர்களாக கருதப்படுகிறவர்கள், அபூரணத்தன்மையினால் அந்த ஆவியை முழுஅளவில் பெற்றுக்கொள்ள இயலாதவர்களாக உள்ளனர். சிறியஅளவில் விழுந்துபோன மனிதன் அதிக ஆவியையும், அதிகஅளவில் விழுந்துபோனவர்கள் குறைவான ஆவியையுமே பெறமுடியும்.

தம்முடைய மகிமையுள்ள இராஜ்யத்தில் அவரோடுகூட இணைந்து செயல்படப்போகிறவர்களாக வேண்டி, அவருடைய அங்கத்தினர்களாகும்படி தங்களைத்தாங்களே ஒப்புக்கொடுக்கப் போகிறவர்களுக்காக, தம்முடைய புண்ணிய கிரயத்தை செலுத்தும்படி பிதாவானவருடைய சமூகத்தில் கிறிஸ்துவானவர் பிரத்தியட்சமானபோது, தெய்வீக அங்கீகரிப்பையும் அனுமதியையும் பெற்றார். இந்த அங்கீகரிப்பானது, அர்ப்பணிப்பின் உடன்படிக்கையின்போது தங்களைத்தாங்களே ஒப்புக்கொடுத்தவர்கள் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதன் மூலம் வெளியரங்கமாயிருக்கிறது. அந்த பரிசுத்தஆவியானது பெந்தெகொஸ்தே நாளில் முதன்முதலாக தரப்பட்டது. அப்.பேதுரு கூறும்போது பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படியே அவர் பரிசுத்தஆவியைப்பெற்று, அவருடைய சீஷர்களுக்கு அதை பொழிந்தருளினார். இது பிதாவினுடையதாக இருந்து, குமாரனால் தரப்படுகிறது.

சரீர அங்கத்தினர்களாயிருக்கிற ஒவ்வொரு தனித்தனி அங்கத்தினர்மேல் பரலோகப் பிதாவானவர் தம்முடைய ஆவியை ஊற்றவேண்டிய அவசியமில்லாதிருந்தது. நாம் புரிந்துகொண்டபடி நிழலில் தரப்பட்ட அடையாளமானது முழுமையானதாகும். மகா பிரதான ஆசாரியருடைய தலையின்மேல் ஊற்றப்படுகிற பரிசுத்தஆவியானது அவருடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமானதால், சரீரம் முழுவதும் அவ்வகையில் அபிஷேகம் பண்ணப்படுகிறது. இவ்விதமாக நாம் சரீரத்துக்குள்ளாக, அவருடைய அங்கியின் கீழாக வரும்போது நாம் ஒவ்வொருவரும் அபிஷேகத்துக்குள்ளாக பங்குபெறுகிறோம்.

**பூரண நிச்சயமானது சத்திய அறிவின் அடிப்படையிலானது**

ஜெபத்தின் மூலமாக தேவனிடத்தில் வர சிலாக்கியம் பெற்றவர்களைக்குறித்து அப்போஸ்தலர்; “விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம்” என பேசுகிறார். தேவனுடைய வீடு என்கிற வகுப்பாரைக் குறித்தே அவர் பேசுகிறார். மாம்சீக இஸ்ரயேலர்களும் தேவனுடைய வீடாக இருந்தாலும், அவர்கள் அவ்வீட்டின் பணிவிடைக்காரராக இருந்தனர். ஊழியக்காரரும் அவ்வீட்டிற்குரியோராக இருந்தாலும், பிள்ளைகள் என்கிற விசேஷமான நிலையில் இல்லை. மோசே பணிவிடைக்காரராக தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தார் என்ற பரிந்துரை நமக்கு தரப்பட்டிருந்தாலும், கிறிஸ்துவின் சபையானது புத்திரருடைய வீடாக இருப்பதுடன், கிறிஸ்துவே அவ்வீட்டின் தலைவராயிருக்கிறார். இந்த புத்திருடைய வீடே தேவனிடத்தில் சேருகிறதாயிருக்கிறது. இந்த நிச்சயத்தோடு சரியானவகையில் அணுகுபவர்கள் இங்கே குறிப்பிடப்பட்ட சில நிபந்தனைகளை சார்ந்து உள்ளனர். அவர்கள் இருமனமுள்ளவர்களாக இல்லாமல் உண்மையான இருதயமுள்ளவர்களாயிருக்கவேண்டும். முழு செம்மையான இருதயம் அவர்களுடையதாக இருக்கவேண்டும். தங்களுடைய ஜீவியத்தை தேவனிடத்துக்கு தரும்போது என்ன கூறினார்களோ அதை முழுமையாக மெய்ப்பித்துக் காட்டுகிறவர்களா–யிருக்கவேண்டும். பின்பு அவர்கள் பரிசுத்தமான

தைரியத்துடனும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் கர்த்தரிடத்தில் வரலாம். தேவனுடைய உண்மை ஜனங்கள் எடுக்கும் படிகள் அனைத்தும், அவருடைய வழிகாட்டுதலை உணர்ந்து எடுக்கும் விசுவாசத்தின் படிகளே. விசுவாசத்தின் பூரண நிச்சயத்திற்கும், அதைவிட குறைவான விசுவாசத்திற்கும் வேறுபாடு உள்ளது. ஒரு பகுதியான விசுவாசம் நம்மை ஒருவகையில் தேவனுக்கு அருகில் கொண்டுவருகிறது. உறுதியான விசுவாசமோ நம்மை இன்னும் அருகாமையில் கொண்டுவருகிறது. ஆனால் விசுவாசத்தின் பூரண நிச்சயமோ, ஒருவேளை அம்மாதிரியான விசுவாசம் காத்துக்கொள்ளப்படுமானால், ‘‘நம்மை முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக்கும்’’. அதோடுகூட மகிமையில் ராஜரீக ஆசாரியக்கூட்டத்தாரின் கடைசி அங்கத்தினர்களாக்கும்.

இந்த விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை ஒரேநாளில் அடையமுடியாது. அது சம்பந்தமாக மேலான தகவல்கள் தேவைப்படுகிறது. நமக்காக கிறிஸ்து ஏன் மரித்தார்? நமக்காக எதைச் செய்ய விரும்புகிறார்? நமக்காக அவர் எதை செய்தார் போன்ற விஷயங்களை தேவன் தம்முடைய வார்த்தையின்மூலம் ஏற்பாடுசெய்து அறிவுறுத்துகிறார். இவையனைத்தும் விசுவாசத்திற்குண்டான அடிப்படையாகவே அமைத்துக் கொடுக்கப்படுகிறது. பின்பு நம்முடைய விசுவாசத்தை பலப்படுத்தும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை நாம் பெற்றிருப்பதோடு, அவருடைய அநுதின வழிநடத்துதல்களும் நம்மேல் உள்ளது. ஆகவே தங்களை முழுதத்தம் செய்த வகுப்பார் மிக அருகாமையில் வருவதோடு, தேவன் அழைத்த மகிமையான காரியங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, பூரண நிச்சயத்தோடு தேவனோடு சேருவர். ‘‘அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி’’ தேவனுடைய சுதந்திரர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உடன் சுதந்திரராகும் வாய்ப்பே அந்த மகிமையான காரியங்களாகும்.

**தேவனுடைய அங்கீகரிப்புக்கு பூரண நிச்சயம் அவசியம்**

தேவனுடைய பிள்ளையானவர் இப்படிப்பட்ட பூரண நிச்சயத்தோடுகூடிய விசுவாசம் இல்லாமல் அவருக்கு அருகாமையில் வரமுடியாது என அப்போஸ்தலர் தெரியப்படுத்துகிறார். பூமிக்குரிய பெற்றோரிடத்தில் ஒரு சிறு குழந்தையானது நம்பிக்கை வைப்பதுபோல, பிதாவினிடத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் மாத்திரமே நெருக்கமான பாதையில் நல்ல முன்னேற்றத்தை எதிர்நோக்கலாம். மேலும் அவருடையவர்களுக்கான சிலாக்கியமான உற்சாகமும், திடநம்பிக்கையும் இல்லையெனில், பரிபூரண சமாதானத்தையும் வாக்குத்தத்தமாகிய இருதயத்தின் இளைப்பாறுதலையும் நாம் பெறமுடியாது. ‘‘உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது’’ என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. தேவனுக்கு மிகமிக அருகில் வரவேண்டும் என்ற விருப்பம் நம்முடைய இருதயத்தில் இருக்கவேண்டும். இல்லையெனில் கிறிஸ்துவுக்குள்ளான சிலாக்கியத்தில் முன்னேறுவதிலும், அடைவதிலும் நாம் தோல்வியடைவோம். அம்மாதிரியான விருப்பமே நீதியின்மேல் பசிதாகமுடையவர்களாயிருக்கிறோம் என்பதற்கான வெளிப்பாடாகும். இவ்வாறாக அவர்கள் நிறைவாயிருக்கும்பொருட்டு, அவர்கட்கு நன்மையானவைகளை செய்யும் முன்பாக, அம்மாதிரியான விருப்பத்தையே கர்த்தர் அவர்களிடம் எதிர்பார்க்கிறார்.

இந்த பாதையில் தொடர்ச்சியாக முன்னேறிச்செல்ல தேவனுடைய வார்த்தையில் உறுதியான நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பூரண நிச்சயமில்லாமல் நாம் கர்த்தரிடத்தில் சேரமுடியாததுபோல, துர்மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்கள் என்ற நிச்சயத்தைப் பெறாவிடில், அல்லது துர்மனசாட்சியுடையவர்களாக இருந்தாலும் தேவனிடத்தில் சேரமுடியாது. அப்போஸ்தலர் கூறுவதுபோல், ‘‘நம்முடைய இருதயமே நம்மை குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்’’. கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாக நம்முடைய ஓட்டத்தை நம் மனசாட்சியே குற்றப்படுத்துமானால், தேவனாலும் அது குற்றமுள்ளதாக தீர்க்கப்படும் என உறுதியாக நம்பலாம்.

எனவே தேவனுடைய பிள்ளையாக ஒருவர் மிக நெருங்கி சேருவாரானால், பிதாவினுடைய அங்கீகரிப்பின் ஆசீர்வாதமான புன்னகையை தொடர்ச்சியாக உணரக்கூடாதவராயிருப்பாரானால், தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக சுத்தமுள்ள மனசாட்சியை உடையவராயிருக்கத் தேடவேண்டும்; என்னுடைய மனசாட்சியானது பலியினாலான எனது உடன்படிக்கைக்கு முழு இசைவானதாகவும், கர்த்தருக்கு பிரியமானதாயிருக்கவும் இருக்க நான் பெருமுயற்சி எடுக்கிறேன் என உண்மையாக கூறவேண்டும். மேலும் நீதிமான்களுடைய அங்கீகரிப்பை முறையாகப்பெற நான் கடும் முயற்சி எடுக்கிறேன் என உண்மையாக கூறவேண்டும். மேலும் நீதிமான்களுடைய அங்கீரிப்பை

முறையாக பெற நான்கடும் முயற்சியும் எடுக்கிறேன் எனவும் என் மனசாட்சி உண்மையாய்க் கூறவேண்டும். ராஜரீக ஆசாரியக் கூட்டத்தின் அங்கத்தினர்களாக, அவரோடுகூட ஆளுகை செய்யும் விதமாக தங்களுடைய ஜீவியத்தை கர்த்தருடைய ஊழியத்துக்கென்று தத்தம்செய்து பலியாக்கினவர்களுக்கு இதைவிட(சுத்த மனசாட்சி) குறைவானது அனுமதிக்கப்படுவதில்லை.

**விசுவாசக் குறைச்சலுக்கான காரணமும் தீர்வும்**

நம்மில் நற்கிரிகைகளை தொடங்கினவர் அதை முடிப்பதற்கு ஆற்றலும் சித்தமுமுடையவராயிருக்கிறார் (பிலி1:6). ஆனால் நம்முடைய மகிமையுள்ள சிலாக்கியமாகிய ‘‘விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை’’ ஒப்பீட்டளவில் எத்துணை குறைவான தேவனுடைய பிள்ளைகளே பெற்றிருக்கின்றனர். ‘‘என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்’’ என வெகு சிலரே கூறமுடியும். தம்மை நேசிக்கிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணின பரலோக இராஜ்யத்தையும் மகிமையான காரியங்களையும் தேவனுடைய கிருபையினாலே நான் உறுதியாக பெற்றுக்கொள்வேன் என உறுதியாகக் கூறலாம். அப்.பவுலும் தீர்க்கதரிசியாகிய தாவீதும் இந்த நம்பிக்கையைக் குறித்து, அது ஒரு மாபெரும் சந்தோஷமானதும், ஆசீர்வாதமானதும் மற்றும் யாரும் பெற்றிராத இருதயத்தின் இளைப்பாறுதலுமானதாக இருக்கிறது என்று அவருடைய இரக்கத்திற்குள் நுழைந்தவர்கள் வெகுசிலரே ஆவர்.

எனவே, இப்படிப்பட்ட விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் வந்தவர்களின் எண்ணிக்கையானது ஏன் மிகவும் குறைவானதாக உள்ளது என நாம் வினவலாம். மற்றவர்களுக்கான தடைகள் என்ன என்றும் அத்தடைகள் எவ்வாறு நீக்கப்படும் எனவும் கேட்கலாம். தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும், அவருடைய வம்சாவளியான இந்த ஆசீர்வாதத்தை எவ்வாறு அனுபவிக்கலாம்? தேவனுடைய நன்மையும் கிருபையும் கடைசிபரியந்தம் என்னை தொடரும் என நான் உணருகிறேன். இராஜ்யத்தில் பங்கடைதலில் எனக்குள்ள ஐயங்களை நீக்கி முற்றிலும் ஜெயங்கொண்டவராவேன் என்று அநேகர் கூறுகின்றனர் அல்லது எண்ணுகின்றனர்.

இவர்களுக்கு ஏன் இந்த சிரமங்கள்? அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை ஏன் அடையாமலிருக்கிறார்கள்? தேவன்பேரில் உள்ள நம்பிக்கை குறைவே அவர்களுடைய சிரமத்திற்குக் காரணம் என நாம் பதிலுரைக்கிறோம். இம்மாதிரியான விசுவாசக்குறைச்சல் அவருக்கு பிரியமானதாக இருக்காது. ஏனெனில் ‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்’’(எபி11:6). மேலும், விசுவாசக் குறைச்சலே அவர்கள் ஜெயங்கொள்ளுதலுக்கு நிலையான தடையாகும். ‘‘நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்’’(1யோவா5:4). விசுவாசமென்னும் பெரிய கேடகமில்லாத கிறிஸ்தவன், எதிராளிக்கும் அவனது தீமையின் சேனைக்கும் முன்பாக தொடர்ந்து அநுகூலமற்றவராகவே இருப்பார்.

எனவே இவ்வகையில் ஒருவர் விசுவாசக் குறைச்சலை உணருவாரானால், ஆதிகால அப்போஸ்தலர்கள் போல, ‘‘ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்’’ என்றபடி ஊக்கத்தோடு ஜெபிப்பாராக. அதன்பின்பு, அவருடைய ஜெபத்திற்கு இசைவாக அவரோ அல்லது அவளோ இருதயத்தில் அவ்விசுவாசத்தை வளரச்செய்வாராக.

1. தேவனுடைய வார்த்தைகளில் உள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களினால் தன்னுடைய ஞாபகசக்தியை புத்துணர்வு பெறச்செய்து அவைகளில் மிகுந்த பரீட்சயமுள்ளவராக ஆவாராக.

2. கர்த்தரோடு உடன்படிக்கை செய்ததினால் இந்த வாக்குத்தத்தங்கள் அவருடையது என்பதை மென்மேலும் சிந்தித்து, அவைகளையே தேடுவாராக. மேலும் கிருபாசனத்திற்கு முன்பாக நன்றியுணர்வோடு இருதயத்திலும் உதடுகளினாலும் அவைகளைக்குறித்து கேட்பாராக. தம்முடைய எண்ணங்களிலும், சகோதரரோடுகூட பரிசுத்தமான காரியங்களைக்குறித்து உரையாடும்போதும் அவைகளைக்குறித்து கேட்பாராக.

சோதனைகளும் கஷ்டங்களும் எழும்போது இந்த அருமையான வாக்குத்தத்தங்களை தம்முடையதென நினைப்பாராக. ஏனெனில் அவரை நேசித்து, பலியினால் உடன்படிக்கை செய்த அப்படிப்பட்டோருக்காக தேவன் இந்த வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்(சங்50:5; மல்கி3:17). இவ்விதமாக அவர் அதுமுதற்கொண்டு பரலோகபிதாவின் வார்த்தைகளை நம்புவதால் அச்சிரமங்களுக்கு மறைமுகமான தீர்வு காணவேண்டும். ஏதாவது ஒரு விபத்து தனக்கு நேரிட்டால், ‘‘சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது’’(ரோமர்8:28) என்கிற வாக்குத்தத்தத்தை நினைவில் கொள்வாராக. நேரிட்ட அந்த விபத்தின்மூலம் தேவையான பாடத்தையோ அல்லது

அவருக்கு ஆசீர்வாதத்தையோ தரும் வாய்க்காலாக தேவன் அதை கண்டிராவிட்டால் அது நடந்திருக்காது என தனக்குள் உறுதிசெய்வாராக.

நம்மில் நற்கிரியைகளை தொடங்கினவர் என்றும் மாறாதவர் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. மேலும் நம்முடைய இருதயங்களை அவருக்கு இசைவாகவைத்து, நம்முடைய பாவங்களுக்காக செய்யப்பட்ட மாபெரும் பாவநிவாரணத்தின்மேல் இன்னும் உறுதியான மற்றும் தெளிவான விசுவாசம் இருக்குமேயானால் நம்முடைய உடன்படிக்கையை தொடர்ச்சியாக புதுப்பித்துக்கொண்டு, நம்முடைய எல்லாவற்றையும் தகன பலிபீடத்தின்மேல் வைத்து, நம்முடைய சித்தத்தின்படியோ, நம்முடைய வழியின்படியோ தகனமாகட்டும். கர்த்தருடைய நித்தியஇராஜ்யத்தின் மகிழ்ச்சியில் பிரவேசிக்கும் வண்ணமாக, நம்மில் நடைபெறுகின்ற இந்த நற்கிரியைகள் நிறைவடையும் என்ற முழு திடநம்பிக்கையுள்ளவர்களாவதற்கு எவ்வகையிலும் நமக்கு காரணமுண்டு. மேலும், ‘‘நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே’’ என்கிற ஆண்டவருடைய அங்கீகரிக்கப்பட்ட ஆசீர்வாதமான வார்த்தைகளை அவ்விசுவாசத்தின் பலனாக நாம் கேட்கலாம்.

———————

**R 5429**

## ‘‘யேகோவாவின் நற்குணம் , அவரது மாபெரும் யுகங்களுக்கடுத்த திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது’’

## “JEHOVAH’S CHARACTER MANIFESTED IN HIS GREAT PLAN OF THE AGES’

ஏன் இயேசுகிறிஸ்து துன்பப்படவும் மரிக்கவும் அழைக்கப்பட்டார் ? மாபெரும் தேவன், தம் குமாரன் கடுந்துயர் மற்றும் மரணத்தை அடையாமல், வேறு ஏதாவது வழியில், மனுக்குலத்துக்கான இரட்சிப்பை நிறைவேற்றியிருக்க முடியாதா ? தேவனுடைய வசனத்தை கருத்தூன்றிப் படிக்கின்ற மாணவருக்கு இந்தக் கேள்விகள் திரும்பத்திரும்ப சிந்தையில் எழுகின்றது, இவைகளுக்கு திருப்தியளிக்கும் வகையில் பதிலளிக்கமுடியும். தேவனால் இந்த விஷயத்தை வேறுபட்ட வகையில் ஏற்பாடு செய்திருக்கமுடியும். அவர் திறமையற்ற தேவன் அல்ல. அவர் சர்வ ஞானமுள்ள தேவன். ஏதேன் தோட்டத்திலிருந்து ஆதாமை வெளியேற்ற தீர்ப்பிட்டபிறகு, அவரது கீழ்ப்படியாமையினிமித்தமாக ஒரு சில காலம் துன்புற்றிருந்து, ஒரு பாடம் கற்றிருந்தநிலையில், மீண்டுமாக தேவதயவுக்கு அவரை சீர்பொருந்தச் செய்திருக்கமுடியும். அந்த அனுபவத்தால் ஆதாம் மிக நல்லதொரு பாடத்தைக் கற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. இவ்வாறே ஆதாமினுடைய குழந்தைகள் எல்லோரும் சில தண்டனையை அனுபவித்திருந்து, சில சுத்திகரிக்கும் அனுபவங்களை பெற்று, அதனால் அனுகூலமடைந்து அவர்கள் எல்லோரும் தேவனோடு மீண்டுமாக இணக்கமாகியிருக்கமுடியும்.

ஆனால் தேவஞானம் வலிமைமிக்க ஆழத்துடன், மகாபெரிய ஞானமான திட்டத்தை வடிவமைத்திருந்தது. தேவதூதர்கள், கேருபீம், செராபிம் மற்றும் மனிதர்களாகிய தம் புத்திக்கூர்மையுள்ள சிருஷ்டிப்புக்கள் நித்திய ஜீவனை ஆதாயமாக்கவேண்டும். அதற்கு, அவர்கள் அவரிடத்தில் முற்றிலும் உண்மைத்தன்மையை காண்பிக்கவேண்டும் என்றும், இதனிமித்தமாக அவர்களது உண்மைத்தன்மையை நிரூபிக்க அனைவரும் பரீட்சிக்கப்படவேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தார். அவர்கள் அனைவரும் சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்ட குணஇயல்புகளைக் பெற்றிருக்கவேண்டும். ஆகவே பரலோகத்திலும் பூலோகத்திலும் அவரது புத்திக்கூர்மையுள்ள சிருஷ்டிப்புக்கள் எல்லாரும்அவரது நன்மைத்தன்மையையும், எல்லா துதிக்கும் பாத்திரர் என்றும் உணரும்நிலைக்கு கொண்டுவரப்பட்டு, தங்கள் இருதயத்திலிருந்து; ‘‘சிங்காசனத்தின்மீது வீற்றிருப்பவர்க்கே கனமும்வல்லமையும் என்றைக்கும் உண்டாவதாக’’ என்று வியப்புடன் உரக்கக்கூவும் பலம்பெறவேண்டும் என்பதே அவரது தீர்மானமாயிருந்தது.

சிருஷ்டிகரிடத்தில் தங்கள் உண்மைத்தன்மையை நிரூபிப்பவர்கள் நித்தியத்துக்கும் வாழ்வார்கள். தங்கள் உண்மைத்தன்மையை நிரூபிக்காதவர்கள் மரிப்பார்கள் – அதாவது, முற்றிலுமான அழிவுக்குள் செல்வார்கள். மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நேரம்வரைக்கும், தம் திட்டத்திலுள்ள இந்த அம்சத்தை தேவன் அறியப்பண்ணவில்லை. அரசாங்கத்தின் பிரமாணத்தை எல்லாரும் அறியும்பொருட்டு, பாவத்துக்கான தண்டனை மரணம் என்று அவர் மனிதனை சிருஷ்டித்தபொழுது பிரகடனப்படுத்தியிருந்தார். இதனால்

நீதிமான் மட்டுமே ஜீவிப்பான், பாவிகள் அனைவரும் இறுதியில் அழிக்கப்படுவர். இதனால் மனிதனது பாவத்தை தேவன் முன்னறிந்திருந்து, ஆதாமின்மேலும் அவரது சந்ததியார்மேலும் தேவனுடைய பிரமாணத்தின் இறுதி தண்டனையை முன்னதாகவே ஏற்பாடுசெய்திருந்தார்.

பாவத்தின் நிச்சயமான முடிவுகளை அறிந்திருந்தார்களானால், அநேகர் பாவத்தை தெரிந்தெடுக்கமாட்டார்கள், பூரணஆற்றலோடு பிறந்திருந்து சரியானதை தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் ஆதாமின் சந்ததி அவரது கீழ்ப்படியாமையின் விளைவாக, விழுந்துபோன நிலைமைகளில் உலகிற்கு வரவேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். பாவத்தின் மனப்பாங்கு எப்பொழுதும் கீழ்நோக்கி செல்கிற தன்மையுடையது, அதுமட்டுமல்ல, அது தன்னில்தானே கூட்டாகசேர்ந்து, அழிவுக்கு வழிநடத்தி, மரணத்தைப் பிறப்பிக்கும்.

பாவத்தின் தீமையான முடிவுகளைப் பற்றிய இந்த மகாபெரிய பாடத்துக்கு தேவதூதர்களும் சாட்சியமளிக்கவேண்டும் என்று தேவன் வடிவமைத்திருந்தார். இவர்கள் மனிதனை சிருஷ்டிப்புக்கு முன்பும், மனிதனின் வீழ்ச்சிக்கு முன்பும், பாவத்தின் விசேஷ சோதனையின் நிலைமைகளால் சூழப்படாதிருந்தனர்.

**தேவதூதர்களுக்கு வந்த சோதனை**

தேவன் தம்மைத் தொழுதுகொள்பவர்கள் ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளவேண்டும் என்று விரும்பினார். இந்த நோக்கமில்லாமல் தம்மை தொழுதுகொள்வோர் யாராயினும் முடிவில் அழிக்கப்படுவர். சாத்தானின் சூழ்ச்சிகள் மூலமாக பாவம் உலகில் நுழையவும், அதோடுகூட தேவதூதர்களை சோதிக்கும் ஆதாரமாகவும் இருக்க தேவன் அனுமதித்தார் என்று நாம் காண்கிறோம். விழுந்துபோன மனுக்குலத்தோடு தொடர்புடைய ஒரு விநோதமான சோதனைக்கு தேவதூதர்கள் அனைவரும் எப்படி வெளிப்பட்டனர் என்பதை நாம் காண்கிறோம்(ஆதி6:15; யூதா6). தாய் ஏவாளுக்கு தீய கவர்ச்சியை தூண்டினான் என்று நாம் நம்புகிறோம். அவனே முதலாவது மீறுதலுக்குட்பட்டவன்.

இந்த தீய கவர்ச்சிக்கு சில தேவதூதர்களின் கூட்டம் இணங்கினர். சிலரோ தேவனுக்கு உண்மைத்தன்மையில் நிலைத்திருந்தனர். பரலோகத்தின் எல்லா தேவதூதர்களும், தங்கள் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியும் ஒரு பெரிய பரீட்சைக்கு உள்ளாகியிருந்தனர். வேதாகமத்தின்படி, தேவனுக்கு இணக்கமாக இருந்த எல்லா தூதர்களும் தங்கள் பரீட்சையில் நிலைகொண்டிருந்தனர். இவர்களுக்கு நித்தியஜீவன் வெகுமதியாக அருளப்படும் என்று வேதாகமம் போதிக்கிறதை நாம் புரிந்திருக்கிறோம். ஏனெனில், அவர்கள் தங்கள் உண்மையையும், கீழ்ப்படிதலையும் நிரூபித்து, தங்கள் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தினர். விழுந்துபோனவர்களோ நியாயத்தீர்ப்பின் மாபெரும் நாளுக்கென அந்தகார சங்கிலிகளால் கட்டப்பட்டுள்ளனர். அந்த நியாயத்தீர்ப்பின்நாள் தற்போது நடைபெறுகிறதென நாம் நம்புகிறோம்.

**தேவனுடைய சிக்கனமான திட்டம்**

மனிதன் “செத்துக்கொண்டே சாவான்” என்ற தண்டனையை 6000 வருடங்களாக பெற்றிருக்கிறான். பாவத்திற்கான சம்பளமே இந்த தண்டனை என்று வேதாகமம் அறிவிக்கிறது. பாவத்தின் பின்தொடரல்களாக எல்லா பலவீனங்களும், சரீரம் மற்றும் சிந்தையின் தேய்மானங்களும் மரணமும் உள்ளன. ஆனால் இந்த பாவம் மற்றும் மரண நிலையிலிருந்து குணப்பட எல்லோருக்கும் ஒருமுழு வாய்ப்பு தரப்படும் என்று தேவன் தீர்மானித்திருக்கிறார், மனிதன் சொஸ்தப்படுவதற்கான ஏற்பாடு கிறிஸ்துவுக்குள்ளாக செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு மிக சிக்கனமான ஒன்று. ஆயிரம் பூரண மனிதர்கள் பாவம் செய்திருந்தார்களானால், அவர்களை மீட்க ஒவ்வொரு பாவிக்கும் ஒரு மீட்பர் என ஆயிரம் பரிபூரண மனிதர்கள் தேவைப்பட்டிருக்கும்.

“கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்”

ஒரு மனிதனுடைய ஜீவனுக்காக ஒரு மனிதனுடைய ஜீவன் என்பதே தேவனுடைய பிரமாணத்தின் தேவையாயிருந்தது – யாத் 21:23–25; உபா19:21.

நம் ஆதிப்பெற்றோரை சிருஷ்டிக்கும் முன்பாகவே, ஒரேயொரு மனிதன் மட்டுமே விழுகைக்குள் செல்லவும், மரணத்தீர்ப்பை அடையும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்று தேவன் ஏற்பாடுசெய்திருந்தார். இவ்வாறு ஒரேயொரு மனிதன் மட்டுமே மீட்பராக தேவைப்பட்டார் என்கிற இந்த ஒரேயொரு மனித ஜீவனை மீட்கும் தொகையாகக் கொடுத்து, ஒட்டுமொத்த மனுக்குலத்தையும் ஜீவனுக்கு திரும்பச் செய்தல் என்கிற இந்த தெய்வீக ஏற்பாடு மிக சிக்கனமானது. பரிபூரண மனிதனாயிருந்த ஆதாமுக்காக விழுந்துபோன எந்த மனிதனாலும் மீட்கும்பொருளாக, ஏற்புடைய தொகையை செலுத்தமுடியாது. எனவே சர்வசிருஷ்டிப்புக்கும் முதற்பேறானவராகிய தம் ஒரேபேறான குமாரனை மனிதனுடைய மீட்பராக கொடுக்க உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவன் முன்தீர்மானித்திருந்தார். இவ்வாறு மீட்பராக ஆகவேண்டுமானால், அவர் மனிதராக வேண்டியிருந்தது.

தேவதூதனுடைய மரணத்தால் மனிதனை மீட்கமுடியாது. ஒரு பரிபூரண மனித ஜீவனுக்கு மற்றொரு பரிபூரண மனிதஜீவன் கொடுக்கப்படவேண்டும் என்பது எதிர்பார்க்கப்பட்ட தெய்வீக நீதியாயிருந்தது. இவையனைத்தையும் தேவன் அறிந்தவராய், மனித மீட்புக்காகவும், திரும்பக்கொடுத்தலுக்காகவுமான தம் மாபெரும் திட்டத்தை நிறைவேற்ற தம் குமாரனை அனுப்பினார். தம் குமாரனிடத்தில் இக்காரியத்தை சர்வ வல்லவர் கட்டாயப்படுத்தினபோதிலும், அது அநீதியாக இருந்திருக்குமானாலும், இதனை செய்வதற்கு தம் குமாரனிடத்தில் எவ்வித இரக்கமற்ற தன்மையோ அல்லது அநீதியோ காணப்படவில்லை. மேலும் தேவன் அநீதி செய்து குற்றவாளியாக முடியாது.

இவ்வாறு லோகோஸ் இவ்வுலகிற்கு வருவது, தாமாக மனமுவந்து எடுத்தமுடிவாக வேத வசனங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. சர்வவல்லவரால் தமக்கு முன்பாக வைத்த மகிழ்ச்சியினிமித்தமாக அவர் இதை செய்தார். உயர்ந்த மட்டத்திலிருந்து தாழ்வான மட்டத்திற்கு – அதாவது மனித நிலைமைக்கு தம் ஜீவனை இடமாற்றீடு செய்யும் அவமானத்தை அவர் சகித்து, இழந்துபோன ஆதாமின் சந்ததியை அவரால் மீட்கமுடியும், அதனிமித்தமாக பிதாவாகிய யேகோவா தேவனுக்கு அடுத்ததாக, தெய்வீக சுபாவத்திற்கு, பிதாவின் சுபாவத்தில் பங்குபெற அவர் உன்னதத்துக்கு உயர்த்தப்படுவார் என்று பிதா குமாரனுக்கு முன்பாக நியமித்திருந்தார். இவையனைத்தும் நம் கர்த்தர் செல்லும் வழியின் உத்வேகமாயிருந்து பிதாவின் சித்தத்தை செய்து, அவரது அங்கீகாரத்தை பெறும் மகிழ்ச்சியை அடையச்செய்தது. தம் பிதாவின் மகிமையான சாயலுக்கு மனுக்குலத்தை சீர்பொருந்தச்செய்து உயர்த்தும் மகிமையே அந்த மகிழ்ச்சியாயிருந்தது. தம்மைத் தாழ்த்தி மனிதனான அவர், சிலுவையின் அவமான மரணத்தை அடைந்து, வாக்களித்தபடி உயர்ந்த ஸ்தானத்துக்கு மெய்யாகவே உயிர்த்தெழுப்பப்பட்டு, உன்னத தேவனின் மாட்சிமையின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் – எபி1:3.

**எல்லையற்ற தேவஞானத்தின் உயர்ந்த நோக்கம்**

தேவனுடைய தனிப்பட்ட மகிமையின் குணாதிசயத்தை ஆதாரமாகக்கொண்ட கொள்கைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பை, தேவனது திட்டம் ஏற்படுத்தித் தந்தது. இதை தேவதூதர்களோ அல்லது மனிதர்களோ மற்ற எவ்விதத்திலும் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடாதிருந்தது. மறுசீரமைப்பின் உயர்வான பணி முழுமையாக நிறைவேறறப்பட்டபிறகு, தேவதூதர்களும் மனிதரும் தேவநீதியைக் கண்டுகொள்வார்கள். அந்த தேவநீதியானது நம் சந்ததி மீது 6000 வருடங்களாக மரணதண்டனையை அனுமதித்து, நிறைவேற்றி வருகிறது. அந்த நீதியானது, ஆதாமுக்காக தண்டனைக்கு ஈட்டுத்தொகை செலுத்த மீட்பரை ஏற்பாடுசெய்தது. இதனிமித்தமாக, ஆதாமும் அவரது பின்சந்ததி முழுவதுமாக விடுவிக்கப்படுவார்கள். அந்நீதியே பிதாவின் நோக்கத்துக்காக தம்மையே பலியாகக் கொடுத்த உண்மையுள்ள தம் குமாரனுக்கு, உயர்ந்த வெகுமதியை அளித்தது. இதுவே நீதியின் மிக உயர்ந்த கருத்தாற்றலாக இருந்து, தேவதூதரும் மனிதரும் பற்றிக்கொள்ளும் கருத்தாக உள்ளது.

தேவனும் தம் பரிவிரக்க அன்பை இந்த வழிவகைகளால் வெளிப்படுத்துகிறார். இல்லையெனில் தேவதூதர்களாலோ மனிதர்களாலோ ஒருபோதும் அறிந்திருக்கமுடியாது போயிருக்கும். பாவம் இருந்திராவிட்டால், மரணமோ துக்கமோ வலியோ இருந்திருக்காது. தெய்வீக இரக்கத்தின் ஆழங்களை அவர்களால் ஒருபோதும் அறியமுடியாமற்போயிருக்கும். உலகில் பாவம் நுழைந்தபிறகு, தேவனுடைய அன்பை தேவதூதர்கள் கவனித்துப் பார்த்தனர். அதற்காக, ''தம் ஒரேபேறான குமாரனை கையளித்து, அவரில் யாரெல்லாம்(மனுக்குலத்தாரில்) விசுவாசம் வைக்கிறார்களோ, அவர்கள் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு'' அதற்காக அவரைத் தந்தருளினார். மற்றவருக்காக தம் ஜீவனை கையளிக்கும் இந்த அன்பைக் காட்டிலும் மேலான அன்பு ஒருவனிடத்திலுமில்லை. தம் குமாரனை உலகத்துக்காக மரிக்க அனுப்பிய பிதாவின் அன்பு அவரது திட்டத்தில் இப்படியாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த அன்பு, வரவிருக்கின்ற யுகத்தில் எல்லா மனுஷருக்கும் வெளிப்படுத்தப்படும், தற்போது அது மிக சமீபத்திலிருக்கிறது.

தேவன் தம் திட்டத்தின்மூலம் அவரது வல்லமையையும் வெளிப்படுத்துவார். உலகங்கள் சிருஷ்டிக்கப்பட்டபொழுது, அவரது வல்லமை காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் மனிதர் மற்றும் தேவதூதர்களின் பலதரப்பட்ட நிலைமைகள் அடங்கும். ஆயினும் அவர் இனி இயக்கவிருக்கிற ஆற்றலோடு ஒப்பிடுகையில், முன்பு வெளிப்படுத்தப்பட்ட ஆற்றல் சிறிதளவே ஆகும். மனிதசந்ததியின் ஒவ்வொரு தனிநபரையும் இந்த வல்லமையானது, அவரது முந்தைய நிலைமைக்கு சீர்பொருந்தச் செய்யும். பிரேதக்குழியிலிருந்து

ஒவ்வொரு மனிதனின் ஆத்துமாவும் எழுப்பப்படும். மனுக்குலத்தின் புரிந்துகொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்டதாக இந்த வல்லமை வெளிப்படுத்தப்படும்.

அதன்பின்பும், தேவஞானம் அற்புதமாக வெளிப்படுத்தப்படும். சிருஷ்டிக்கப்பட்ட எல்லா தேவனுடைய அறிவுத்திறன்கள் மூலம், யுகங்களுக்கடுத்த தெய்வீகத்திட்டத்தின் உன்னதமான பலன் அதன் மகிமையோடும் மாட்சிமையோடும் அப்பொழுது காணப்பட்டிருக்கும். எல்லையில்லாத ஞானமுள்ளவர் என்று எல்லோரும் அவரை வாழ்த்துவார்கள். அவரது சாயலில் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு சிருஷ்டிப்பிடமும் முழுமையான உண்மைத்தன்மை பரீட்சிக்கப்படவேண்டும் என்றும், அதன்படி, உண்மைத்தன்மையும், கீழ்ப்படிதலும் உள்ளோர் மட்டுமே ஜீவன் பெறவேண்டும் என்றும், மற்ற எல்லோரும் அழிக்கப்படவேண்டும் என்றும் அவர் பொருத்தமாக நியமித்திருக்கிறார்.

தேவதூதர்கள் மற்றும் மனிதரில், பாவிகளுடன் தொடர்புகொள்ள அவர் அற்புதமான நிகழ்ச்சிநிரலை உடையவராயிருந்து, தேவதூதருக்கும் மனிதருக்கும் அதிக ஆதாயமளிக்கும் மிகச் சிறந்தவழியை தேவன் தெரிவுசெய்கிறார், அவ்வழி அவருடைய சொந்த மகிமை மற்றும் கனத்தை இறுதியில் அவருக்குப் பெற்றுத்தரும்.

''கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம் ?..

எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின'' – வெளி 15:4.

---------------

**R 1127**

திடம் கொண்டு முன்னேறு !

**COURAGE, PRESS ON !**

களைப்பாயிருக்கிறதே, சோர்ந்துபோனேனே! நல்லது!

அதனால் என்ன ? சொகுசான வாழ்க்கை,

எளிமையாக, இலகுவாக வாழவேண்டுமோ ?

காற்றில் படபடக்கும் ரோஜா இதழ்களை

காலைச்சுற்றிலும் பரப்பி அதன்மீது நடக்கவேண்டுமோ ?

வா எழும்பு! உன்னை அழைக்கும்போதே வேலைசெய்திடு!

திடம் கொள்! எழும்பி உன் பிரயாணத்தைத் தொடர்ந்திடு

தனிமையாய் இருக்கிறேனே!

நல்லது! அதனால் என்ன ?

சிலர் தனியாகத்தான் இருந்திடவேண்டும்

இது எல்லோருக்கும் கொடுக்கப்படுவதில்லை,

பொறுப்பாக உணர்ந்த இருதயம் எழும்பும், விழும்,

இன்னொரு வாழ்க்கையை அது

தன்னுடன் இணைத்துக்கொள்ளுமே!

இருளாயிருக்கிறதே!

நல்லது! அதனால் என்ன ?

சூரியன் ஒரு நாளும் மறையக்கூடாது
என்று விரும்புகிறாயா ?

உன்னுடைய வழித்தடத்தை மறந்துவிடுவாய்
என்று எண்ணுகிறாயா ?

இன்னும் தைரியம்கொள்! கண்டு விசுவாசிக்காதே, காணாமல் விசுவாசி,

வாழ்க்கையை நடத்து! உன்னுடைய ஒவ்வொரு அடியும்

கவனமாய் சரியாக வழிநடத்தப்படுகிறது
என்பதை உணர்ந்திடுவாய்!

மிகவும் கடினமாக இருக்கிறது!

ஆமாம்! அதினால் என்ன

கற்பனையான வாழ்க்கை ஒரு கோடைவிடுமுறைநாளில்

கற்பதற்கு ஏதுமின்றி

ஏதும் செய்யாமல் விளையாட மட்டும் முடிந்ததோ ?

போ! போய் உன் வேலையை தொடர்ந்து செய்திடு!

செய்! அல்லது செத்து மடி!

நீ இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும்!

பொறுமையாகவே கற்றுக்கொள்!

------------------